## யாரிடம் நான் கூற முடியம்?

Prevention of Elder Abuse Committee
OF YORK REGION

### இவ்வகையான துன்புறுத்தல்கள் எவையேனும் நிகழ்வதை நீங்கள் இனங்கண்டால், மனதில் கொள்க-

***எவரும்*** துன்புறுத்தப்படவோ அல்லது முறைகேடான முறையில் நடத்தப்படவோ கூடாது

**யாரிடமாவது சொல்ல வேண்டும்**

- **நீங்கள் நம்பும் ஒருவர்**
- **நீங்கள் சொல்வதைச் செவிமடுக்கும், உங்களிற்கு ஆதரவாக இருக்கும் ஒருவர்**

இது உங்கள் குடும்ப வைத்தியராகவோ, ஓர் நம்பகமான நண்பராகவோ அல்லது ஓர் நிறுவன பராமரிப்பாளராகவோ இருக்கலாம்



அவசர அழைப்பிற்கு
911
பொலிஸ்

---

1 866 876 5423
முதியோர் சேவையிணைப்பு,
இணைப்பு. 6697
துன்புறுத்தல் நிகழும் சாத்தியக்கூறுகள் பற்றி அறிவித்தல் அல்லது கலந்தாலோசித்தல்

---

முதியோர் குற்றத்தடுப்பு பிரிவு
1 800 222 8477
குற்றங்களை அநாமதேயமாக அறிவித்தல் செய்தல்

---

310 COPE
310 2673
குற்றத்தடுப்பும் ஆதரவும்
சகல வயதினருக்கும் 24 மணிநேரமும் திறந்திருக்கும்

---

சமூக பராமரிப்பு அணுகல் மையம்
1 888 470 2222
வீட்டில் சுகாதாரசேவைகளிற்கான மதிப்பீடும் பரிந்துரை யும்

---

முதியோர்கள் பாதுகாப்பு தொடர்பு இணைப்பு
211
தகவலிற்கு அல்லது சந்தேகத்திற்கிடமான துன்புறுத்தல் பற்றிய பரிந்துரைக்கு

Language: Tamil

# முதியோர் துன்புறுத்தலை இனங்காணலும் தடைசெய்தலும்

www.elderabuse-yorkregion.ca



முதியோர் துன்புறுத்தல்

# முதியோர் துன்புறுத்தல் என்றால் என்ன?

ஓர் முதியவருக்கு தீங்கு விளைவிக்கும் எந்த செயலும் முதியோர் துன்புறுத்தலாகும்.

கலாச்சாரம், பால், இனம், அல்லது நிதி நிலைமை போன்ற பாகுபாடின்றி, ***முதியவர் துன்புறுத்தலிற்கு எவரும் ஆளாகலாம்.***

***துன்புறுத்தலிற்கு காரணமானவர்,*** ஓர் குடும்ப அங்கத்தவராகவோ, நண்பராகவோ, அயலவராகவோ, வேதனம் பெறும் பராமரிப்பாளராகவோ, தொழில் வல்லுனராகவோ, நிதி அல்லது சட்ட ஆலோசகராகவோ அல்லது சுகாதார பராமரிப்பாளராகவோ இருக்கலாம்.



**Prevention of Elder Abuse Committee**

**OF YORK REGION**



## துன்புறுத்தல் வகைகள்

முதியோர்களை துன்புறுத்தல் மற்றும் புறக்கணித்தல் பல வடிவங்களில் இடம்பெறலாம், உடல்ரீதியாக, உளரீதியாக, பணரீதியாக துன்புறுத்தல் அல்லது அலட்சியம் செய்தல்.

உடலிற்கு அசௌகரியம், நோ, அல்லது காயங்களை ஏற்படுத்தும் எந்த செயற்பாடும் **உடல்ரீதியான துன்புறுத்தல்** ஆகும். அவையாவன:

- அடித்தல், கடித்தல், உலுப்புதல், முரட்டுத்தனமாக கையாளல், வலுக்கட்டாயமாக தடுத்து வைத்தல்
- எதுவித தேவையற்ற தொடுகைகள் அல்லது உடன்பாடற்ற பாலியல் நடவடிக்கைகள்

***உளவியல் துன்புறுத்தல்*** ஆனது துன்பம், பயம், பயனற்ற வாழ்வு, அல்லது மதிப்பற்றநிலை போன்ற எந்த உணர்வுகளையும் தோற்றுவிக்கும் செயல் அல்லது வார்த்தைகளாகும், அவையாவன:

- அவமானங்கள், மிரட்டல்கள், பரிகசித்தல், தரக்குறைவாக பேசல்
- தீர்மானங்கள் எடுப்பதற்கு அனுமதிக்காமை
- குடும்பத்தவர் மற்றும் நண்பர்களின் தொடர்பை தடுத்தல்

உரையாடலை ஆரம்பித்தல்

***பணரீதியான துன்புறுத்தலானது*** பணம், உடமைகள் அல்லது சொத்துகளை களவாடல் அல்லது தவறாகப் பயன்படுத்தலாகும், அவையாவன:

- உங்கள் சொந்த நிதி சம்பந்தமான முடிவுகளை எடுப்பதற்கு அனுமதியாமை
- ஓர் நண்பருக்கோ, உறவினரிற்கோ அல்லது வேறொருவரிற்கோ பணம் கொடுக்குமாறு அழுத்தம் கொடுத்தல்
- அனுமதியின்றி பணம் எடுத்தல் அல்லது காசோலையை பணமாக்குதல்
- உயிலை தவறாகப்பயன்படுத்தல்
- சேவைகளிற்காக அதிக பணம் அறவிடல் அல்லது வியாபார தந்திரங்களினால் அதிக அழுத்தம் கொடுத்தல்

***புறக்கணித்தல்,*** பராமரிக்க அல்லது உதவவேண்டிய பொறுப்பில் உள்ள ஒருவர் அதைச்செய்யாதிருத்தல், அதாவது:

- நல்ல உணவு, உடை, அல்லது பாதுகாப்பான வசிப்பிடம் வழங்காதிருத்தல்
- நாளாந்த வாழ்க்கைக்குத் தேவையான உபகரணங்களை வழங்காதிருத்தல் உதாரணமாக,
- (e.g.,walker,சக்கரநாற்காலி)
- பற்றுச்சீட்டுகளிற்கு பணம் செலுத்தாது விடல்

Ontario Trillium Foundation
Fondation Trillium de l'Ontario
An agency of the Government of Ontario
Un organisme du gouvernement de l'Ontario

AbuseHurts.Ca
ABUSEHURTS
Canadian Centre For Abuse Awareness
Martin Kruze Memorial Fund